# கம்பராமாயணம்

1. உறங்குகின்ற கும்பகர்ணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

கும்பகர்ணனின் பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய் என்று அவனை எழுப்புகிறார்கள். காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் படுத்து உறங்கு என்று சொல்கிறார்கள்.

2. பாலகாண்டத்தில் ஆற்றுப்படலம் கூறும் நயம் என்ன? (அல்லது ) சரயுநதி எங்கெல்லாம் பாய்கிறது?

- இயற்கை கொலுவீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கூறியிருப்பதே பாலகாண்டத்தில் ஆற்றுப்படலம் கூறும் நயமாகும். அவை,
- மகரந்தம் சிந்துகின்ற சோலைகள்
- மரம் செறிந்த செண்பகக் காடுகள்
- அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள்
- புதுமணல் தடாகங்கள்
- குருக்கத்தி, கொடி வேலியுடைய கமுகந்தோட்டங்கள், நெல்வயல்கள் இவை அனைத்திலும் சரயு நதி, ஓர் உயிர் உடலில் ஊடுருவிப் பாய்வது போல் பாய்கிறது.

3. மகரயாழின் தேன் ஒத்த இசைபோல வண்டுகள் நீங்காரம் பாட மருதம் எவ்வாறு வீற்றிருக்கிறது? (அல்லது) பாலகாண்டத்தில் நாட்டுப்படலம் கூறும் நயம் என்ன?

- குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட
- விரிதாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்ற
- சூழும் மேகங்கள் மத்தள ஒலியாய் எழ
- மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பதுபோல் காண
- நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய

- மகர யாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருக்கிறது.

4. கோசல நாட்டின் வளத்தை கம்பனின் உத்தி எவ்வாறு காட்சிப்படுத்துகிறது? (அல்லது) கோசல நாட்டில் எவையெல்லாம் இல்லை?
   - கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால் கொடைக்கு அங்கே இடமில்லை.
   - நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை.
   - பொய்மொழி பேசுபவர் இல்லாததால், மெய்மை தனித்து விளங்குவதில்லை.
   - பலவகை கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை என்று, ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுத்தப்படுகிறது.

5. இராமனின் திருமேனி அழகைக் கங்கைப் படலத்தில் கம்பர் எவ்வாறு விளக்குகிறார?

பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்துவிட, இடையே இல்லையெனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும், இளையவன் இலக்குவனொடும் போனான். அவன் நிறம் மையோ? பச்சைநிற மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமோ? ஐயோ ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன் என இராமனின் திருமேனி அழகை விளக்குகிறார் கம்பர்.

6.ஏழைமை வேடன் இறந்திலார் விளக்குக, (அல்லது) உலகத்தார் தன்னை எவ்வாறு பழிப்பர் என்று குகன் கூறினான்?

பரதனின் சேனைகளைக் கண்ட குகன் தன் சேனைகளிடம் கூறியது ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றை பரதன் முதலானோர் கடந்து செல்வார்களா? யானைகள் கொண்ட சேனையைக்கண்டு, புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான்? தோழமை என்று இராமர் சொன்ன சொல் ஒப்பற்ற சொல் அல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழி சொல்ல மாட்டார்களா? என்று உரையாற்றினான்.

7. கம்பராமாயணம் நூல்குறிப்பு எழுதுக.

கம்பர் இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி “இராமாவதாரம்” எனப் பெயரிட்டார். இது கம்பராமாயணம் என வழங்கப்பெறுகிறது. இது ஆறு காண்டங்களை உடையது. கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை.

8. கம்பர் குறிப்பு வரைக.

“கல்வியில் பெரியவர் கம்பர்”, கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்” போன்ற முதுமொழிகளுக்கு உரியவர் கம்பர். சோழ நாட்டுத் திருவழுந்தூரைச் சார்ந்தவர்: திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர். விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன் என்று புகழ்பெற்றவர். சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலைஎழுபது முதலிய நூல்களை இயற்றியவர்